بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 24/05/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## உண்மையான இஸ்லாமிய கிலாஃபத்தின் அருள்கள் மற்றும் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நிகழ்வுகளைப் பற்றிய எடுத்துரைப்பு

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾

إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக்கொள்வதற்கான நல்வாய்ப்பு வழங்கியுள்ளது அவன் நம்மீது புரிந்துள்ள பேரருளாகும். அல்லாஹ் அன்னார் மூலமாக இஸ்லாத்தின் மறுமலர்ச்சி நிகழ்வதற்கான வாக்குறுதியளித்திருந்தான். அன்னார் அல்லாஹ்வின் வாக்குறுதிகளுக்கு ஏற்பவும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கு ஏற்பவும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஊழியராக இஸ்லாம் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காக அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அனுப்பப்பட்டார்கள்.

பிறகு அல்லாஹ்வின் வாக்குறுதி மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கு ஏற்பவே அன்னாரால் உருவாக்கப்பட்ட ஜமாஅத்தில் கிலாஃபத் அமைப்பு தொடர்ந்தது. எனவே, இவை அல்லாஹ்வின் வாக்குறுதிகள் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள் நிறைவேறுவதன் வெளிப்பாடாகும். இதனால் நாம் ஒவ்வோர் ஆண்டும் அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்டுள்ள இடங்களிலெல்லாம் மே 27 அன்று கிலாஃபத் தினத்தைக் கொண்டாடுகிறோம்.

மே 26 அன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வஃபாத் ஆனார்கள். மே 27 அன்று ஜமாஅத் இறை வாக்குறுதிகளுக்கு ஏற்ப ஹஸ்ரத் மவ்லானா ஹக்கீம் நூருத்தின் (ரலி) அவர்களை முதல் கலீஃபத்துல் மஸீஹாக தேர்ந்தெடுத்து அவர்களது கையில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய பணிகளைத் தொடரச் செய்வதற்கான உறுதி எடுத்துக்கொண்டது. அவர்களது வஃபாத்துக்குப் பிறகு, ஜமாஅத் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கையில் ஒன்றிணைந்தது. பிறகு மூன்றாம் கிலாஃபத் காலகட்டம், அதையடுத்து நான்காம் கிலாஃபத் காலகட்டம் ஆரம்பமானது. ஒவ்வொரு காலகட்டத்திலும் எதிரி ஜமாஅத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முழு முயற்சி செய்தான். ஆனால், எல்லா விதத்திலும் அவனுக்குத் தோல்வி முகமே மிஞ்சியது.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் வஃபாத்துக்குப் பிறகு அல்லாஹ் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவதை வெளிப்படுத்திக் காட்டினான். ஐந்தாவது கிலாஃபத் தேர்ந்தெடுக்கப்பட்டது. என்னுடைய எண்ணற்ற பலவீனங்கள் இருந்தும், அல்லாஹ் எனக்கு அசாதாரணமான உதவியையும் ஆதரவையும் வழங்கினான். ஜமாஅத்தின் முன்னேற்றத்தின் அடி மிகவும் முன்னே சென்று கொண்டே இருந்தது. பல டஜன் நாடுகளில் அஹ்மதிய்யத் எனும் செடி விதைக்கப்பட்டது. முறையாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அமைப்பு உருவானது.

நூற்றுக்கணக்கான நகரங்கள் மற்றும் சிற்றூர்களில் சுயமே அல்லாஹ்வே மக்களுக்கு வழிகாட்டி கிலாஃபத்தின் உதவி, ஆதரவிற்கான காட்சிகளைக் காட்டி மக்களுடைய உள்ளங்களில், கிலாஃபத்துடன் தொடர்புக்கான உணர்வை உருவாக்கி, கலப்பற்றவர்களைக் கொண்ட ஜமாஅத்களை உருவாக்குவதற்கான ஏற்பாட்டைச் செய்தான். மேலும், இந்தக் காட்சிகளைக் காட்டிக் கொண்டே செல்கிறான். எனவே அல்லாஹ்வும் தன் வாக்குறுதிகளை மறக்கக்கூடியவனும் அல்லன்; மீறக்கூடியவனும் அல்லன். மேலும், எல்லாரையும் விட அன்பிற்குரிய தன் நபி ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளை நிறைவேற்றுவதில் குறைவைக்கக்கூடியனும் அல்லன்.

நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் மலரும் என்ற ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேறக் காணக்கூடிய நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். எனவே, எவர்கள் உண்மையில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஊழியரின் ஜமாஅத்துடன் இணைந்திருக்கக் கூடியவர்களோ அவர்கள் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசுகளாகிக் கொண்டே இருப்பார்கள். இன் ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும், 'எனக்குப் பிறகும் ஜமாஅத்தில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப எனது கிலாஃபத்தின் தொடர் தொடர்ந்து கொண்டே இருக்கும்' என்று கூறினார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் கலீஃபாக்களில் சிறந்தவனாக இருக்கிறேன். இப்பொழுது அல்லாஹ் (ஒருவருக்கு) கிலாஃபத் எனும் தகுதியை அளித்து எவர் வந்தாலும், என்னைப் பின்பற்றியே தோன்றுவார். எனவே, உலக அடிப்படையில் இப்பொழுது ஒருவர் எவ்வளவு வேண்டுமானாலும் முழு முயற்சி செய்யட்டும்; ஒருபோதும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை விட்டு விலகி கிலாஃபத் மலரவே முடியாது.

எவ்வாறு இருப்பினும், ஹுஸூர் (அலை) அவர்களின் வஃபாத் நேரம் நெருங்கிய போது, அன்னார் கிலாஃபத் தொடரும் என்று நற்செய்தி வழங்கிய வண்ணம் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ் இரண்டு விதமான வல்லமைகளை வெளிப்படுத்துகிறான். முதலாவதாக, நபிமார்களின் கைகளாலேயே தனது வல்லமையின் கரத்தைக் காட்டுகிறான். இரண்டாவதாக, நபியின் வஃபாத்திற்குப் பிறகு சிரமங்கள் முன்வந்து விடும்போது, எதிரிகள் வலுபெற்று விடும்போது, இப்பொழுது இவர்களுடைய பணி சீர்குலைந்து விட்டது என்று அவர்கள்

எண்ணும்போது, இனி இந்த ஜமாஅத் அழிந்து விடும் என உறுதி கொண்டு விடும்போது, ஜமாஅத் மக்களும் தடுமாற்றத்திற்குள்ளாகி விடுகின்றனர். அவர்களுடைய இடுப்புகள் முறிந்து விடுகின்றன. பேறிழந்த பலர் மார்க்கத்தை விட்டு விடும் வழிகளை மேற்கொண்டு விடுகின்றனர். அப்பொழுது இறைவன் இரண்டாவது முறையாக தனது வல்லமை மிக்க ஆற்றலை வெளிப்படுத்துகிறான். விழப்போகும் ஜமாஅத்தை சீர்தூக்கி விடுகிறான். எனவே, இறுதி வரை பொறுமை காப்பவர் ..... இறைவனின் அந்த அற்புதத்தைப் பார்க்கிறார்.

அன்னார் கூறினார்கள்: எனவே, அன்பிற்குரியவர்களே! எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக அல்லாஹ் இரண்டு வல்லமைகளைக் காட்டுவது தொன்று தொட்டே அல்லாஹ்வின் நடைமுறையாக இருக்கும்போது, இப்பொழுது இறைவன் தனது தொன்மையான நடைமுறையை விட்டுவிடுவது சாத்தியமில்லை. எனவே, நான் உங்களிடம் கூறிய இந்த விஷயத்தினால் வருந்தாதீர்கள். உங்களுடைய உள்ளங்கள் கவலை தோய்ந்து விட வேண்டாம். ஏனெனில், இரண்டாம் வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். அது வருவது உங்களுக்குச் சிறந்ததாகும். ஏனெனில், அது நிரந்தரமானதாகும். அது கியாமத் வரை அறுபடாது. மேலும், நான் செல்லாத வரை அந்த இரண்டாம் வல்லமை வர முடியாது.

நான் இடைச் செறுகலாக இந்த விஷயத்தையும் கூறி விடுகிறேன். நான் இந்த விஷயத்திலிருந்து இந்த ஒரு விளக்கத்தையும் பொருத்திக் கூறுகிறேன். அதாவது, எவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வயதைப் பற்றிய விவாத்தில் மூழ்கிக் கிடக்கிறார்களோ அவர்களுக்கும் இதில் பதில் உள்ளது. ஹுஸூர் (அலை) அவர்கள் தமது ஆயுளின் ஆண்டுகளை எண்ணிக்கூறி இவ்வளவு ஆண்டுகள் மீதமுள்ளன என்று கூறவில்லை. மாறாக, தாம் திரும்பி வருவதைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். மேலும், வயதைப் பற்றிய விவாதத்திற்கு எந்த முக்கியத்துவம் அளிக்கவில்லை. மாறாக, பணியை நிறைவேற்றுவதற்கு முக்கியத்துவம் உள்ளது. அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

நான் செல்லும் போது இறைவன் அந்த இரண்டாம் வல்லமையை உங்களுக்காக அனுப்பி விடுவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். இதுகுறித்து அல்லாஹ் பராஹீனே அஹ்மதிய்யாவில் வாக்குறுதியளித்துள்ளான். மேலும், அந்த வாக்குறுதி என்னைப் பற்றியதல்ல. மாறாக, உங்களைப் பற்றிய வாக்குறுதி ஆகும். அதுகுறித்து இறைவன், 'உம்மைப் பின்பற்றுபவர்களாகிய இந்த ஜமாஅத்தை நான் கியாமத் வரை மற்றவர்கள் மீது மேலோங்கச் செய்வேன்' என்று கூறுகிறான்.

எனவே, உங்களுக்கு என்னைப் பிரியவேண்டிய நாள் வருவது அவசியமாகும். அப்பொழுதுதான் அதற்குப் பிறகு, நிரந்தர வாக்குறுதிக்கான அந்த நாள் வரமுடியும். நம் இறைவனாகிய அவன் வாக்குறுதிகளில் உண்மையானவனும், உண்மையுள்ளவனும், உண்மையான இறைவனும் ஆவான். அவன் எவற்றைக் குறித்து வாக்குறுதி அளித்துள்ளானோ அந்த அனைத்தையும் உங்களுக்குக் காட்டுவான். இவை உலகத்தின் இறுதிநாள்கள்தான்; பல

பேரழிவுகள் இறங்குவதற்கான நேரம்தான்; ஆனால், இறைவன் வாக்குறுதி அளித்த அந்த அனைத்து விஷயங்களும் நிறைவேறிவிடாத வரை இந்த உலகம் நிலைத்திருப்பது அவசியமாகும்.

அல்லாஹ்வின் வாக்குறுதிகளுக்கு ஏற்ப அன்னாரது மறைவிற்குப் பிறகு ஒவ்வொரு கிலாஃபத் காலகட்டத்திலும் ஜமாஅத் முன்னேற்றங்களின் படித்தரங்களைக் கடந்து கொண்டே செல்கிறது. எப்பொழுதும் போல், தொலைதூர நாடுகளில் உள்ளவர்களுடைய, ஒருபோதும் எந்த ஒரு கலீஃபாவையும் பார்த்திராதவர்களுடைய உள்ளங்களைத் தானே வழிநடத்தி கிலாஃபத்தின் கொடியின்கீழ் வருவதற்கு நேர்வழி வழங்குகிறான். சில மக்களின் நிகழ்வுகளையும் முன்வைத்து விடுகிறேன். அவற்றின் மூலம் அஹ்மதிய்யா கிலாஃபத்தோடு அல்லாஹ்வின் ஆதரவு இருப்பது மற்றும் அவனுடைய வாக்குறுதிகள் நிறைவேறுவதற்கான காட்சியை நாம் பார்க்கிறோம்.

புர்கினாஃபாஸோவின் ஒரு ஜமாஅத்தில் முதன்முறையாக MTA பொருத்தப்பட்டது. மக்கள் முதன்முறையாக காலத்தின் கலீஃபா அவர்களைப் பார்த்த போது அவர்களுடைய கண்கள் குளமாகியிருந்தன. அவர்களுடைய முகங்களில் மகிழ்ச்சி பொங்கியது. அவர்கள், ‘நாங்கள் MTA வில் காலத்தின் கலீஃபா அவர்களைப் பார்த்து எங்களுடைய கண்கள் குளிர்ச்சி அடைகின்றன; உள்ளங்கள் நிம்மதி அடைகின்றன’ என்று கூற ஆரம்பித்தார்கள்.

கேம்பியாவின் அமீர் சாஹிப் எழுதுகிறார்கள்: Motor Mechanic ஒருவர் தற்செயலாக MTA வில் என்னை உரை நிகழ்த்திக் கொண்டிருக்க கண்டு, இந்த நபருக்கு இறைவனின் ஆதரவு உள்ளது என்பதில் எந்த ஐயமும் இல்லை என்று கூறினார். எனவே, இவர் தனது குடும்பத்தின் 14 பேருடன் பைஅத் செய்து விட்டார்.

ஜெர்மனியின் தப்லீக் செயலர் எழுதுகிறார்கள்: அரேபியர் ஒருவர் இவர்களுடைய ஸ்டாலுக்கு வந்து, திருக்குர்ஆனின் ஜெர்மன் மொழியாக்கத்தை வாங்கிச் சென்றார். அவருக்கு ஜெர்மனி ஆண்டு மாநாட்டுக்கு வருவதற்கு அழைப்பு கொடுக்கப்பட்டது. சில நிர்பந்தங்களின் பேரில் அவர் தன் அண்ணன் ஒருவரையும் குடும்ப உறுப்பினர் ஒருவரையும் அனுப்பி விட்டார். ஜல்ஸாவில் எனது உரையைக் கேட்ட பின் அவருடைய அண்ணன், ‘இந்த நபர் நிச்சயமாக இறைவனின் ஆதரவு பெற்றவராவார்’ என்று கூறினார். அவர் அன்றிரவே பைஅத் படிவத்தை நிரப்பி அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து விட்டார்.

கேம்ரூனின் ஒரு நகரத்தில் 8 குடும்பங்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தன. புதிதாக பைஅத் செய்தவர்கள் கூறுகிறார்கள்: MTA எங்களுடைய பிள்ளைகளின் வாழ்வை மாற்றியமைத்து விட்டது. அவர்களில் ஓர் இளைஞரைப் பள்ளிக்கூட ஆசிரியர் என் ஜுமுஆ பேருரையைக் கேட்பதற்கு விடுமுறை அளிக்கவில்லை. அதற்கு அவர் கூறினார்: நான் பள்ளிக்கூடத்தை விட முடியும். ஆனால், ஜுமுஆ பேருரையை விட முடியாது.

புர்கினாஃபாஸோவிலும் ஒருவர் என்னை MTAவில் பார்த்த போது, ‘இவர்களையோ நான் கனவில் பார்த்துள்ளேன்’ என்று கூறினார். அவர் அக்கணமே எந்தச் சான்றுமின்றி, அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டார்.

அவருடைய கிராமத்தின் பல மக்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். இப்பொழுது இறையருளால் அந்த கிராமத்தில் வலுவான ஒரு ஜமாஅத் நிலைபெற்று விட்டது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இதன் தொடர்ச்சியாக கோங்கோ கன்ஸாஷா, செனிகால், பெல்ஜியம், கினீபஸாவூ, கிர்கீஸ்தான், நைஜீரியா மற்றும் மாலி முதலிய மற்ற சில நாடுகளிலிருந்து அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் அல்லாஹ்வின் ஆதரவு மற்றும் அவனுடைய வாக்குறுதி நிறைவேறுவதற்கான காட்சிகளை உள்ளடக்கிய ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நிகழ்வுகளையும் எடுத்துக் கூறினார்கள். இதற்குப் பிறகு கூறினார்கள்:*

இந்த சில நிகழ்வுகள் உள்ளன. இவற்றின் மூலம், அல்லாஹ் தானே மக்களின் உள்ளங்களைத் திறக்கிறான் என்ற இறையாதரவு வெளிப்படுகிறது. அந்நியர்களின் உள்ளங்களில் அஹ்மதிய்யா கிலாஃபத் மீதான தாக்கத்தை நிலைபெறச் செய்கிறான். நல்லியல்பு கொண்ட மக்களை கிலாஃபத்துடன் இணைக்கிறான். அல்லாஹ்வே அஹ்மதிய்யா கிலாஃபத்துக்கு உதவி, ஆதரவு புரிகிறான்; மேலும், ஜமாஅத் ஒவ்வொரு நாளும் முன்னேற்றப் பாதையில் வெற்றிநடை போடுகிறது என்ற விஷயத்திற்கு அஹ்மதிய்யா கிலாஃபத்தின் வரலாற்றின் ஒவ்வொரு நாளும் சான்றாக உள்ளது.

எல்லாம் வல்ல அல்லாஹ் எனக்கும் தனதருளால் இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஒவ்வோர் அஹ்மதியையும் முழுமையான நன்றியுணர்வு மற்றும் கலப்பற்ற தன்மையுடன் எப்பொழுதும் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் இணைத்து வைப்பானாக. அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் வாக்குறுதி அளித்திருந்த அந்த எல்லா நோக்கங்களையும் நிறைவேற்றுவானாக! அஹ்மதிய்யா கிலாஃபத் மூலமாக ஓரிறைவனின் அரசாட்சி உலகில் நிலைபெறட்டுமாக! ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடி உலகில் பறக்கக்கூடிய காட்சியை உலகம் பார்க்கட்டுமாக!

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் **மதிப்பிற்குரிய சௌத்ரீ நஸ்ருல்லாஹ் கான் சாஹிப்** மற்றும் **மதிப்பிற்குரிய க(ன்)வர் இத்ரீஸ் சாஹிப்** அவர்களுடைய நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். மேலும், மர்ஹூம்களின் ஜனாஸா காயிப் தொழுவைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ
يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**